# உள்ளடக்கம்


கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள் 02

தலைவரின் செய்தி 03

நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளரின் செய்தி 04

**1. நிதியத்தின் பின்னணி**
- நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
- 2016 ஆம் ஆண்டிலே நிதியத்தின் பதவியணி
- நிறுவனக் கட்டமைப்பு

**2. 2016 ஆம் ஆண்டில் நிதியத்தின் செயலாற்றுகை**
- 2016 ஆம் ஆண்டிலே பயனாளிகள்
- கடன் வழங்கும் செயற்பாடு மற்றும் முன்னேற்றம்
- வழங்கிய கடன் எல்லைகள் மற்றும் கடன் தொகையின் பெறுமதி
- கடன் அறவீட்டின் முன்னேற்றம்
- அலுவலகக் கட்டடத் தொகுதி – லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்
  - வாடகை வருமானம்
  - நிதியத்தின் வலுவாந்தன்மை
  - தொழிற்பாட்டு வருமானம்

**3. சாதாரண நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி**
- ஊழியர்களின் ஊக்கத்தை விருத்தி செய்தல்
- பதவி உயர்வு நடைமுறைகள்
- புதிய ஆட்சேர்ப்புக்கள்
- நிதியத்தின் வளாகத்தை மேம்படுத்தல்
- அலுவலகப் பணிகளை நவீனமயப்படுத்தல்
- பதவியணிக்கான கடன்
- லேக் ஹவுஸ் நிறுவனத்தின் வைப்புப் பணத்தை விடுவித்தல்
- பிணை முறிகள்
- கூட்டங்கள்
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

**4. எதிர்காலத் திட்டங்கள்**

**5. சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கைகள்**

**6. வருமானக் கூற்று**

**7. ஐந்தொகை**

**8. வருமானக் கூற்று**

**9. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**10. வரி விதிப்பு**

# லோஹோர் சீமாட்டி கடன் நிதியம

## நோக்கு

அரச சேவை ஊழியர்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமாக செயற்படுதல்

## பயற்பணி

அரச துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்தல் மற்றும் இடர்களின் போது நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக திருப்திகரமான பொதுசன சேவை ஒன்றிற்கு பங்களிப்புச் செய்து சிறந்த அரச சேவையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செலுத்துதல்.

## குறிக்கோள்

அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளுராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் இலகுவான நிபந்தனைகளின் கீழ் குறுங்கால கடன்களை துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவித்தல்

## பணிகள்

- கடன் நிதியத்தினை நிலையாக பேணிவரும் அதே நேரம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல்.
- நிறுவனசார் மேம்பாடு மற்றும் இயலளவு விருத்தி.
- நிதியினைத் திரட்டி நிறுவனத்தை பேணிவருவதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலும் அமுலாக்கலும்.
- கடன் முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான உபாயத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் கடன் வழங்கும் வசதிகளை மேம்படுத்தல்.

## *கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்*

*நிறுவகத்தின் பெயரும் முகவரியும்* :

- லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்
- 100/3/2/,சேர் சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02.

*கூட்டிணைக்கப்படல்* :

- 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க லோஹோர் சீமாட்டி கடன் நிதியப் பொறுப்புப் சபைச் சட்டத்தின் (1953 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட) கீழ் நிறுவப்பட்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் நியதிச் சட்ட நிறுவனமாகும்.

*நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை* :

- திரு. ஏ.பீ. குரும்பலபிட்டிய - தலைவர் (பணிப்பாளர் அரச கணக்குகள் திணைக்களம்)
- திரு. எஸ். வின்ஸ்டனன் பத்திராஜ - நிருவாகப் பொறுப்பாளர்
- திரு. டப்.டீ. ஜயசிங்க - உறுப்பினர்
- திரு. வசந்த பெரேரா - உறுப்பினர்
- திருமதி. மர்லின் திசாநாயக்க - உறுப்பினர்

*கணக்காய்வுக் குழு* :

- திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ் - தலைவர், (பணிப்பாளர், அரச நிதித் திணைக்களம்)
- திரு. டப்.டீ. ஜயசிங்க - உறுப்பினர்
- திருமதி. மர்லின் திசாநாயக்க - உறுப்பினர்

*கணக்காய்வாளர்* : ரன்வத்தை அன் கம்பனி,
கணக்காளா,
141/3,வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

*சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வங்கி* : மக்கள் வங்கி,
தலைமையகக் கிளை,
கொழும்பு 02.

# தலைவரின் செய்தி

அரச துறை ஊழியர்களுக்க நிதி வசதியளிக்கும் பிரதான நிறுவனங்களில் ஒன்றாக அமைவதனை புதிய நோக்காகக் கொண்ட லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை தொடர்பில் பின்னூட்டல் ஒன்றினை மேற்கொள்ளும் போது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2016 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்ளல், அதற்கான காரணங்களையும் 2017 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் மீளாய்வினை மேற்கொள்ளும் பணியானது நிதியத்தின் செயற்பாட்டினை வழிநடாத்துவதற்கு பெருதும் உறுதுணையாக அமையும். அதன் போது பிரதானமாக நிதியத்தின் பிரதான வருமான மார்க்கமாக அமைகின்ற கடன் மீதான வட்டி வருமானம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14 மில்லியன் ரூபாவினால் அதிகரித்த போதிலும் கடன் வழங்கிய விகிதமானது ஏறத்தாழ 20% இனால் குறைவடைந்துள்ளது. அதனால் 2017 ஆம் ஆண்டிலே கடன் பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களின் அளவினை அதிகரித்துக் கொள்வதற்காக முக்கியமாக பிரதேச செயலக மட்டத்தில் கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் வசதியளித்தல், தனியார் துறை ஊழியர்களுக்கும் கடன் பெறக்கூடிய வகையில் சட்டத்தன்மையினை ஆராயும் பொருட்டு வாய்ப்பளித்தல் மற்றும் மேலதிக நிதியினை திரட்டிக் கொள்வதன் ஊடாக அதிகம் விண்ணப்பிக்கப்படுகின்ற ரூபா. 250,000 கடன் பெறுவோரினை அதிகரித்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உத்தேசிக்கப்படுகின்றது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டிலே புதிய மதிப்பீட்டு பெறுமதியின் மீது மிகவும் நம்பகத்தன்மைமிக்க வாடிக்கையாளர்களுடன் உயர் வாடகை கட்டணங்களில் கீழ் ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு முடிந்துள்ளது. இதனூடாக எதிர்வரும் ஆண்டுகளில் இந்த வருமான மூலங்களில் விருத்தி ஒன்றினை எதிர்பார்க்கக்கூடியதாக உள்ளது.

முக்கிய அரசாங்கத்தின் எவ்வித நேரடி நிதி நன்மையினையும் பெறாது வருடாந்தம் பாரிய வரித் தொகையொன்றினை நிதியத்தினால் அரசாங்க திரண்ட நிதியத்திற்கு பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அரச துறையில் ஏனைய நட்டத்தில் இயங்குகின்ற மற்றும் திரண்ட நிதியத்திற்கு சுமையாக காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைதல். முக்கியமாக முறையான திட்டமிடல் மற்றும் நிதி சார் ஒழுக்கத்தன்மையுடன் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதன் ஊடாக வரையறுக்கப்பட்ட வளத்தினை வைத்துக் கொண்டு பொதுத் திறைசேரிக்கு மேலதிக சுமையினை ஏற்படுத்தாதவாறு இயங்க முடியும் என்பதனை நிதியமானது கடந்த சில ஆண்டுகளாக திரண்ட நிதியத்திற்கு பெற்றுக் கொடுத்த பங்களிப்பின் ஊடாக தெளிவாகின்றது.

இறுதியாக 2016 ஆண்டு காலப் பகுதியினுள் பெற்றுக் கொண்ட முன்னேற்றங்களில் நேரடி மற்றும் மறைமுக பங்களிப்பிற்காக நிருவாக சபையின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்கு எனது விசேட நன்றியினை தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றேன். முக்கியமாக நிறுவனத்தின் பிரதான வளமாக அமைகின்ற ஊழியர்களின் அர்ப்பணிப்பின்றி நிருவாக சபைக்கு மாத்திரம் நிறுவனத்தின் முன்னேற்த்தினை அடைந்து கொள்வது என்பது கடினமான விடயமாகும். எனவே இதுவரையில் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு பிரதிபலனாக எதிர்காலத்திலே மிகுந்த நன்மைகளை பெறக்கூடிய வேலைத்திட்டங்களின் பால் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஏ.பீ. குரும்பலபிட்டிய

தலைவர்

லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

## *நிருவாக நம்பிக்கை பொறுப்பாளரின செய்தி*

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் தலைவர்/ நிருவாக நம்பிக்கை பொறுப்பாளர் பதவியின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் குறிப்பி.டப்பட்டுள்ளவாறு 2015 ஆம் ஆண்டிலே இந்நிறுவனம் காணப்பட்ட நிலையிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு பணிகள் மீளமைப்புத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி மீளமைப்புத் திட்டத்தின் மூலம் இந்நிறுவனமானது பல வருடங்களாக மேற்கொண்டு வந்த மரபு ரீதியான கடன் வழங்கும் திட்டத்திற்கு அப்பால் சென்று அதனுடன் தொழில்நுட்பத்தினையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் கடன் வழங்கும் கால எல்லையை 3 நாட்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளதுடன் மேலும் கடன் விண்ணப்பப்பத்திரங்களை நிறுவனத்தின் இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான வசதியளித்தல் மூலம் கொழும்பு மாவட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது நாடளாவிய ரீதியில் பணியாற்றி வருகின்ற அரச ஊழியர்களுக்கு கடன் பெற்றுக் கொள்ளும் வசதிகள் விஸ்தரிக்கப்பட்டதன் ஊடாக நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே கடன் பெறும் செயற்பாட்டினை மேலும் பிரபல்யப்படுத்துவதன் ஊடாக மிகவும் விஸ்தரிக்கப்பட்ட சேவையொன்றினை அரச துறை ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மாவட்ட மட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்களுடன் தனிப்பிட்ட முறையில் மேற்கொளள்ப்பட்ட கலந்துரையாடல்களின் மூலம் மாவட்ட ரீதியில் கடன் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் தொகையில் சாதகதமான விருத்தியொன்றினை அடைந்து கொள்ள முடிந்தது.

நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளுக்கு இடையேயும் நிதி மற்றும் நிருவாக முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனங்களை கட்டுப்படுத்துதன் ஊடாக நிறுவனத்தின் செயற்பாட்டினை முறைப்படுத்தும் நோக்கில் நிறுவனத்தின் பணிகளை மீளமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனூடாக நிதியத்தில் பணியாற்றும் ஊழியர்களின் திருப்தி மற்றும் அவர்களது வினைத்திறன் என்பனவும் அதிகரிக்கப்பட்டன. நிறுவனத்திலே எதுவித நவீனமயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாதிருந்த கட்டிடங்கள் நவீன மயப்படுத்துவதன் ஊடாக நிறுவனத்தை மெருகூட்டக்கூடியதாக அமைந்துள்ளது.

மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்கையில் வெளிப்படையான தன்மை, திறமைகள், வினைத்திறன் மற்றும் செயற்திறன் என்பன நிதியத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு பங்களிப்பு



செலுத்திய பதவியணியினருக்கு, நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு மற்றும் நிதி அமைச்சு, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புக்கள் என்பவற்றுக்கு இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் நோக்கு மற்றும் செயற்பணி என்வற்றுக்கு வெற்றிகரமான முறையில் மேலும் பலம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



நிருவாக நம்பிக்கை பொறுப்பாளர்

லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்



# 01 நிதியத்தின் பின்னணி

இலங்கையிலே சிறுது காலம் வசித்து வந்த ஸ்கொட்லாந்து நாட்டவரான ஜீன் லோஹோர் சீமாட்டியினால் கடன் நிதியம் ஒன்றினை நிருவுவதற்கு தேவையான ஆரம்ப மூலதனமாக 300 பவுன் பெறுமதியான தொகை அன்பளிப்பு செய்யப்பட்டது. அப்போதைய புன்னிய ஆணையாளராக இருந்த சீ.ஈ.வி. நெதனியல் பாதிரியார் இந்நிதியத்தினை ஆரம்பிக்கும் பணிக்கு தலைமை தாங்கியுள்ளதுடன் இந்நிதியமானது 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1951 ஆம் ஆண்டின் 38ஆம் இல்கக லோஹோர் சீமாட்டி கடன் நிதிய சட்டத்தின் ஊடாக இந்நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டது.அன்று முதல் இந்நிதியத்தின் பயனாளிகளுக்கு கடன் வழங்கி மற்றும் அவற்றினை மீள அறவிட்டு தொழிற்பாட்டு ரீதியிலான ஒரு நிதியமாக இயங்கி வந்துள்ளது. அரச துறை மற்றும் வர்த்தக கம்பனிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களும் தமது குறுங்கால நிதி தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அப்போது காணப்பட்ட வங்கி முறைமையின் ஊடாக அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமையினால் அவ்வாறானவர்கள் கூடிய வட்டி வீதத்தில் கடன் வழங்கும் நபர்களிடமிருந்து கடன் பெறுவதை பழக்கமாக கொண்டிருந்தனர். இவ்வாறான ஒரு பின்னணியில் அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்கள் கடன் சுமையினால் பீடிக்கப்பட்டார்கள். இவ்வாறான ஒரு சூழலில் லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் நிறுவப்பட்டதுடன் அதன் பின்னர் அவ்வாறான ஊழியர்களுக்கு கடன் பெறுவதில் பாரிய நிவாரணம் கிடைக்கப்பெற்றது. 1951ஆம் ஆண்டிலே இச்சட்டம் கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் இந்நிதியத்திற்கு அரசாங்கத்தினாலும், வேறு நன்கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற அன்பளிப்புக்களை பயன்படுத்தி இந்நிறுவனத்திற்கு சொந்தமான மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

## 1.1 நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

நம்பிக்கை பொறுப்பாளர் சபையானது கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுகின்ற அரச துறை மற்றும் தகைமைமிக்க தனியார் துறை பிரதிநிதிகளை கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் போசகராக நிதி அமைச்சர் பணியாற்றுகின்றார். நிதியத்தின் நிருவாகப் பணிகளுக்காக நிருவாக நம்பிக்கை பொறுப்பாளர்கள் சட்டத்தின் 10வது மற்றும் 11 ஆவது பிரிவுகளின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களில் இருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அச்சட்டத்தின் 5வது பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தலைவர் பதவி பொதுத் திறைசேரியின் பிரதிநிதிக்கு வழங்கப்படுகின்றது.



## 1.2 அட்டவணை 01 – 2016 ஆம் ஆண்டிலே நிதியத்தின் பதவியணை

| அனுமதிக்கப்பட்ட பதவியணி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது பணியாற்றுவோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| கணக்காளர் | 01 | 01 |
| நிருவாக உத்தியோகத்தா | 01 | 01 |
| கணக்கு அலுவலர் | 01 | 01 |
| உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | 01 | 01 |
| கடன் அறவீட்டு அலுவலர் | 01 | 01 |
| தகவல் தொழில்நுட்ப அலுவலா | 01 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தரம் (ஆவணக் காப்பக உதவியாளர் உட்பட | 33 | 33 |
| கட்டிட மேற்பார்வையாளர் (முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம்) | 01 | 01 |
| அலுவலக பணியாளர்<br>பங்களா பொறுப்பாளர் | 06 | 06 |
| சாரதி | 02 | 02 |
| **மொத்தம்** | **48** | **48** |

## 1.3 நிறுவனக் கட்டமைப்பு



# 2

# 2016 ஆம் ஆண்டிலே நிதியத்தின் செயலாற்றுகை

## 2.1 2016 ஆம் ஆண்டிலே புதிய பயனாளிகள்

2016 ஆம் ஆண்டிலே அரச மற்றும் அரை அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 3676 ஊழியர்கள் இந்நிதியத்தின் பயனாளிகளாகியுள்ளனர். அப்பயனாளிகள் வசிக்கும் மாவட்டங்களுக்கேற்ப இரண்டாம் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டிலே முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டளவில் கடன் தொகையில் 20.7மூ குறைவொன்று காணப்பட்ட போதிலும் கடன் தொகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 7.07மூ வளர்ச்சியினைக் காட்டுகின்றது. பயனாளிகளில் 75மூ இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது மூள்றாம் அட்டவணையில் புலனாகின்றது.

அட்டவணை **02 – 2015/2016 ஆம் ஆண்டுகளில் கடன் பெற்றுக்கொண்ட அரச மற்றும் அரை அரச ஊழியர்கள்**

| | பயனாளிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | **2016** | (%) | 2015 | (%) |
| கொழும்பு | 531 | 14.44 | 664 | 14.32 |
| கம்பஹா | 561 | 15.26 | 541 | 11.67 |
| அநுராதபுரம் | 257 | 6.99 | 334 | 7.20 |
| கண்டி | 205 | 5.58 | 314 | 6.77 |
| வவுனியா | 04 | 0.11 | 07 | 0.15 |
| களுத்துறை | 338 | 9.19 | 367 | 7.92 |
| இரத்தினபுரி | 154 | 4.19 | 206 | 4.44 |
| காலி | 205 | 5.58 | 246 | 5.31 |
| குருநாகல் | 368 | 10.01 | 498 | 10.74 |
| புத்தளம் | 52 | 1.41 | 83 | 1.79 |
| யாழ்ப்பாணம் | 01 | 0.03 | 01 | 0.02 |
| பொலன்னருவை | 107 | 2.91 | 134 | 2.89 |
| திருகோணமலை | 15 | 0.41 | 26 | 0.56 |
| முல்லைதீவு | 03 | 0.08 | 09 | 0.19 |
| மன்னார் | 0 | 0.00 | 11 | 0.24 |
| பதுளை | 146 | 3.97 | 208 | 4.49 |
| மாத்தளை | 77 | 2.09 | 134 | 2.89 |
| அம்பாந்தோட்டை | 111 | 3.02 | 119 | 2.57 |
| கேகாலை | 212 | 5.77 | 259 | 5.59 |
| மட்டக்களப்பு | 04 | 0.11 | 01 | 0.02 |
| அம்பாறை | 68 | 1.85 | 84 | 1.81 |
| மொனராகலை | 93 | 2.53 | 164 | 3.54 |
| நவரெலியா | 58 | 1.58 | 62 | 1.34 |
| மாத்தறை | 107 | 2.91 | 164 | 3.54 |
| மொத்தம் | **3676** | **100** | **4,636** | **100** |




வரைபு **-01** 2015.'.2016 ஆண்டுகளில் கடன் பெற்றுக்கொண்ட அரச மற்றும் பகுதி அரச ஊழியர்களின் பயனாளிகள் மாவட்ட ரீதியில்

அட்டவணை **03 –** 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரச ஊழியர்களின் பயனாளிகள் (பதவிகளுக்கு ஏற்ப)

| பதவி | 2016 | 2015 |
|---|---|---|
| கோப்ரல் | 1117 | 1,723 |
| இராணுவ சிப்பாய் | 699 | 1,054 |
| இராணுவ சார்ஜன் | 121 | 281 |
| மேஜர் | 16 | 27 |
| லுதினன் | 8 | 37 |
| சமயற்காரர் | 28 | 22 |
| சிற்றுண்டிச்சாலை ஊழியர் | 32 | 20 |
| பொலிஸ் கான்ஸ்டபள் | 496 | 344 |
| பொலிஸ் சார்ஜன் | 120 | 106 |
| பொலிஸ் பரிசோதகர் | 31 | 15 |
| உப பொலிஸ் பரிசோதகர் | 28 | 14 |
| பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் | 23 | 08 |
| பொலிஸ் சிவில் உதவியாளர் | 0 | 22 |
| தீயணைப்பு படையினர் | 15 | 18 |
| சாரதிகள் | 105 | 99 |
| சிறைச்சாலை மேற்பார்வையாளர் | 26 | 56 |
| அளவீட்டு உதவியாளர் | 26 | 28 |
| சுகாதார நிருவாக அலுவலா் | 0 | 04 |
| சுகாதார சிற்றூழியா் | 3 | 07 |
| சாதாரண தொழிலாளர் | 232 | 261 |
| அலுவலக உதவியாளர் | 226 | 209 |
| முகாமைத்துவ உதவியாளர் | 116 | 137 |
| அபிவிருத்தி உதவியாளர் | 9 | 06 |
| காவற்காரர் | 11 | 08 |
| மோட்டார் தொழில்நுட்பவியலாளர் | 4 | 09 |
| தொழில்நுட்பவியலாளா் | 0 | 04 |
| தச்சு வேலை உத்தியோகத்தர் | 4 | 04 |
| மனிதவள உதவியாளர் | 0 | 10 |
| நிருவாக உத்தியோகத்தர் | 1 | 04 |
| மேசன் | 3 | 04 |
| கணக்காளர் | 5 | 04 |
| களஞ்சிய உதவியாளர் | 1 | 06 |
| மின்சார தொழில்நுட்பவியலாளர் | 1 | 03 |
| மேற்பாா்வையாளா் | 1 | 05 |
| தபால் அலுவலர் | 4 | 22 |
| உதவிப் பணிப்பாளர் | 2 | 06 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 1 | 02 |
| புத்தக கட்டுநர் | 3 | 10 |
| கிராம சேவை உத்தியோகத்தர் | 0 | 05 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 3 | 05 |
| ஆணை பெறாத அலுவலர் | 4 | 0 |
| அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் | 9 | 0 |
| அளவீட்டு உதவியாளர் | 6 | 0 |
| தாதியர் | 9 | 0 |
| கபிதான் | 23 | 0 |
| யானைப் பாகன் | 5 | 0 |
| மின்விளக்கு ஏற்றுநர் | 1 | 0 |
| இயந்திர இயக்குநர் | 1 | 0 |
| தொழில்நுட்ப அலுவலர் | 1 | 0 |
| தபால்காரர் | 3 | 0 |
| மொழிபெயர்ப்பாளர் | 1 | 0 |
| கேர்னல் | 5 | 0 |
| முன்பள்ளி ஆசிரியர் | 2 | 0 |
| நூலகர் | 1 | 0 |
| பணிப்பாளர் | 4 | 0 |
| ஏனைய | 81 | 27 |
| மொத்தம் | **3676** | **4636** |

## 2.2 2016 கடன் வழங்கும் செயற்பாடும் அதன் முன்னேற்றமும்

பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த அரச அல்லது பகுதி அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் இந்நிதியத்திலிருந்து கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும

- ஓய்வூதியச் சம்பளத்துடன் கூடிய அரச சேவையில் பணியாற்றுகின்ற மூன்று வருடங்கள் ஆகக் குறைந்த சேவைக்காலத்தினை கொண்டுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.
- பகுதி அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவராயின் ஆகக் குறைந்தது 5 வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையினை முழுமையாக மீள அறவிட்டுக் கொள்கின்ற அளவிற்கு போதிய சேவைக் காலத்தினை கொண்டிருத்தல் (ஓய்வு பெறும் வயதெல்லை 55 வருடங்களாக கொள்ளப்படும்)
- விண்ணப்பதாரிகள் மேற்படி தகைமையுடைய இரண்டு பிணையாளர்களை சமர்ப்பித்தல் வேண்டும.
- பகுதி அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவராயின் இரண்டு பிணையாளர்களில் ஒருவர் ஆகக் குறைந்தது 3 வருட நிரந்தர சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டுள்ள ஓய்வூதியச் சம்பளம் உடைய அரச சேவையில் பணியாற்றும் ஒருவராக இருத்தல் வேண்டும்.
- அனைத்து கடன் விண்ணப்பதாரிகளினதும் மாதாந்த சம்பளத்தில் 40% எல்லையினுள் கடன் தவணையினை மீள அறவிட்டுக் கொள்ளக்கூடிய இயலுமை இருத்தல் வேண்டும.

மேற்படி தகைமை பெறுவோரிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்பத்திரங்கள் மற்றும் கடன் வழங்கல் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் பின்வரும் அட்டவணையின் மூலம் குறிப்பிடப்படுகின்றது.

### அட்டவணை – 04 – கடன் வழங்கும் செயற்பாடு -2016

| மாதம் | கடன் பெற விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | கடன் வழங்கிய எண்ணிக்கை | கடன் பெறுமதி (ரூ. ‘000) |
|---|---|---|---|
| ஜனவரி | **228** | 343 | 28,060 |
| பெப்ரவரி | 233 | 255 | 20,100 |
| மார்ச் | 302 | 343 | 26,350 |
| ஏப்ரல் | 249 | 206 | 16,500 |
| மே | 307 | 345 | 29,830 |
| ஜூன் | 366 | 338 | 28,520 |
| ஜூலை | 372 | 304 | 25,000 |
| ஆகஸ்ட் | 265 | 380 | 32,470 |
| செப்டெம்பர் | 280 | 266 | 22,570 |
| ஒக்டோபர் | 262 | 323 | 26,340 |
| நவம்பர் | 239 | 244 | 20,790 |
| டிசம்பர் | 409 | 329 | 28,470 |
| மொத்தம் | **3512** | **3676** | **305,000** |




### வரைபு – 02 கடன் வழங்கும் தொழிற்பாடு - 2016

2016 ஆம் ஆண்டிலே கடன் பெறுவதற்காக விண்ணப்பித்தோர் தொகை 3512 ஆக இருந்த போதிலும் 3676 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்குறைவிற்கான காரணம் பற்றி ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் பயன் பயனாக, 2015 ஆம் ஆண்டின் இறுதி காலப் பகுதியில் பிணையாளர்கள் கைச்சாத்திடுவதற்கு வருகைத் தராமையால் விண்ணப்பங்கள் சில மீதமாக இருந்தமை மற்றும் 2015 ஆம் ஆண்டில் இறுதி மாதங்களில் இராணுவ வீரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கான கடன் வழங்குகையில் தேவைப்படுகின்ற சீ.எல். அனுமதிப் பத்திரங்கள் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் கிடைக்கப் பெற்றமை என்பவற்றினை குறிப்பிடலாம்.

### 2.3 வழங்கிய கடன் எல்லை மற்றும் கடன் தொகையின் பெறுமதி

2016 ஆண்டு காலப் பகுதியினுள் கடன் வழங்கிய தொகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.7மூ இனால் குறைவொன்றினை காட்டுகின்றபோதிலும் கடன் தொகையின் அளவானது முன்னைய ஆண்டை விடவும் 7.07மூ வளர்ச்சியினைக் காட்டியது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2016 ஆம் ஆண்டளவில் வழங்கிய ரூபா. 250,000 மற்றும் ரூபா. 100,000 ஆகிய கடன் தொகைகளை அதிகரித்ததன் ஊடாக அதிக வட்டி வருமானம் ஒன்றினை எமது நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளும் நோக்கில் எமது நிதியத்தின் மொத்த கடன் மூலதனத்தில் அதிகப் பகுதி இக்கடன் தொகையின் பக்கம் ஈடுபடுத்தியமையின் மூலம் முறையே ரூபா. 250,000 கடன் தொகையில் 33.33மூ ஆலும் ரூபா. 100,000 கடன் தொகையானது 118மூ இனாலும் அதிகரித்துள்ளது. எனினும் கடன் மூலதனமானது இந்நிலையினுள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் கடன் தொகையில் குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவொன்றினை காணக்கூடியதாக உள்ளது

அட்டவணை 05 – கடன் வழங்வரையறைக்கு ஏற்ப முன்னேற்றம்

| உச்ச கடன் வரையறை | வழங்கிய கடன்களின் எண்ணிக்கை | கடன் தொகையின் பெறுமதி (ரூ. ‘000) |
|---|---|---|
| 250,000 | 36 | 9,000,000.00 |
| 100,000 | 2347 | 234,700,000.00 |
| 50,000 | 1103 | 55,150,000.00 |
| 40,000 | 82 | 3,280,000.00 |
| 30,000 | 71 | 2,130,000.00 |
| 20,000 | 37 | 740,000.00 |
| 10,000 | 0 | 0 |
| மொத்தம் | **3676** | **305,000,000.00** |

### 2.4 கடன் மீள அறவிடலின் முன்னேற்றம்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுடன் தொடர்புடைய கடன் வழங்கல் மற்றும் மீள அறவிடல் பற்றிய முன்னேற்றம் 6ஆம் அட்டவணையில் மற்றும் 3ஆம் வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016ஆம் ஆண்டிலே மிகவும் கவர்ச்சிகரமான முன்னேற்றம் ஒன்றினை காணக்கூடியதாக உள்ளது.

- *கடன் வழங்கள்* - முன்னேற்றம் - 7.07%
- *கடன் மீள அறவிடல்* - முன்னேற்றம் - 25%

| ஆண்டு | கடன் எண்ணிக்கை | கடன் வழங்கல் (ரூ. ‘000) | கடன் மீள அறிவிடல் (ரூ. ‘000) |
|---|---|---|---|
| **2013** | 5005 | 194,040 | 240,064 |
| **2014** | 5122 | 203,505 | 252,973 |
| **2015** | 4636 | 284,860 | 273,868 |
| **2016** | **3676** | **305.000** | **342.358** |

அட்டவணை 06 – 2013 முதல் 2015 வரையிலகடன் வழங்கல் மற்றும் கடன் மீள அறவிடல்

வரைபு 03 - கடன் வழங்கல் மற்றும் மீள அறவிடல் பற்றிய முன்னேற்றம்




### 2.5 அலுவலக கட்டிடத் தொகுதி – லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்

#### 2.5.1 வாடகை வருமானம்

லோஹோர் சீமாட்டி கடன் நிதிய கட்டடத்தில் 5,500 சதுர அடி பரப்பளவு நிதியத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் மீதமுள்ள இடவசதி பின்வரும் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுத்து 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் வாடகை வருமானமாக 13.4 மில்லியன் ரூபா உழைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 07 – 2016 ஆம் ஆண்டிற்கான கட்டிட வாடகை வருமானம்

| தொடர் இல. | நிறுவனம் | வாடகைக்கு பெறப்பட்டுள்ள மாடி | சதுர அடி அளவு | வருமானம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் | 3 ஆம் மாடி | 5,500 | - |
| 02 | வாகன தரிப்பிடம் | தரை மாடி | 5,290 | - |
| 03 | லேக் ஹவுஸ் புத்தக நிலையம்(2016.01-2016.10) | கீழ் மாடி | 5,500 | 1217,366 |
| | தேசிய சேமிப்பு வங்கி (2016-11 முதல்) | | | 1050,000 |
| 04 | கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு | 1 - மாடி | 2,415 | 2462,790 |
| 05 | இலங்கை மின்சார சபை | 1 ,2 - மாடி | 4700 | 4393,412 |
| 06 | இலங்கை மின்சார சபை – தகவல் பிரிவு | 2 - மாடி | 2750 | 2805,000 |
| 07 | அரச தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு | 2 - மாடி | 840 | 960,000 |
| 08 | ஏ.ஜே.எஸ். எஸோஸியேட்டட் நிறுவனம் | இல :100/20 | 380 | 480,000 |
| | மொத்தம் | | **27,375** | **13,368,558** |

### 2.5.2 நிதியத்தின் நிலைத்திருக்கும் தன்மை

நிதியத்தின் தொழிற்பாடு மற்றும் நிதி செயற்பாடுகள் என்பவற்றினை பேணிவருவதற்காக நம்பிக்கை பொறுப்பாளர் சபை தீவிர கவனம் செலுத்தியுள்ளது. இந்நிறுவனம் பொதுத் திறைசேரியின் மீது அல்லது வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் மீது தங்கி வாழும் ஒரு நிறுவனமாக அல்லாது ஊழியர்களின் சம்பளம் உட்பட அனைத்துவித செலவுகளையும் வட்டி வருமானம் மற்றும் கட்டிட வாடகை வருமானம் என்பவற்றின் மூலம் மேற்கொள்கின்றது. வட்டி வருமானத்தின் மூலம் தொழிற்பாட்டின் ஸ்திரத்தன்மை உறுதி செய்யப்படுவதுடன் அறவிடமுடியாக் கடன், ஏனைய நிருவாக செலவினங்கள் மற்றும் கடன் மீள அறவீடு என்பவற்றுக்காக ஏற்படுகின்ற செலவினங்கள் அடங்கலாக ஏனைய அனைத்து செலவினங்களும் மேற்படி வருமானத்தின் மூலம் ஈடுசெய்யப்படுவதனால் அதன் பின்னர் மேலதிகமாக உள்ள தொகையினை மக்கள் வங்கியின்

அட்டவணை 08 – முதலீடுகள்

| முதலீட்டு வகைகள் | வங்கி | 2016/12/31 (රු.) | 2015/12/31 (රු.) |
|---|---|---|---|
| நிலையான வைப்புக்கள் | மக்கள் வங்கி | 76,201,532 | 90,792,272 |
| நிலையான வைப்புக்கள் | தேசிய சேமிப்பு வங்கி | 15,513,431 | - |
| மொத்தம் | | **91,714,964** | **90,792,272** |

நிலையான வைப்பில் முதலீடு செய்து அதன் மூலம் வட்டி வருமானத்தினை உழைக்கின்றது.

### 2.5.3 தொழிற்பாட்டு வருமானம்

2016 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானமானது 29 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்திருந்ததுடன் தேறிய தொழிற்பாட்டு மிகையானது 21 மில்லியன் ரூபாவாகும். 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானமானது 72 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன் தேறிய தொழிற்பாட்டு மிகையானது 17 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது. அது சம ஆண்டின் தேறிய தொழிற்பாட்டு வருமானமான 17 மில்லியன் தொகையுடன் ஒப்பீட்டளவில் 21 மில்லியன் ரூபா தொகை அதிகரிப்பினை காட்டுகின்றது. 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நீண்டகாலமாக நிலவிய தொழிற்படா கடன் செயற்பாட்டினை முடிவுறுத்தியதன் பின்னர் 2016.12.31 ஆம் திகதியன்று தொழிற்படாக் கடன் ஏற்பாடுகள் ஒதுக்கல் கணக்கில் தொடர்ந்தும் இருந்துவந்த மீதியானது 3 இலட்சம் ரூபாவாகும். இத்தொகையானது 2016 ஆம் ஆண்டின் வருமானத்துடன் சேர்க்கப்பட்டு வட்டி வருமானம் ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்தமை காரணமாக 2016 ஆம் ஆண்டினுள் அவ்வருமானம் அதிகரிக்கப்பட்ட போதிலும் அதனுடன் ஒப்பீட்டளவில் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளும் அதிகரித்தமை, நீண்ட காலமாக திருத்தங்கள் செய்யாது காணப்பட்ட லோஹோர் சீமாட்ட கடன் நிதியக் கட்டிடத்தை திருத்தம் செய்யும் பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்ளல் மற்றும் ஏனைய வருமானங்கள் மீது வரி ஏற்பாடுகளின் மாறுபாடுகள் ஆகிய செலவினங்கள் அதிகரித்தமையினால் 2016 ஆம் ஆண்டிலே வருமானம் அதிகரித்த பெறுமதிக்கு ஏற்ப தேறிய தொழிற்பாட்டு மிகையானது குறைந்த வீதத்தில் அதிகரித்துள்ளமை இடம்பெற்றுள்ளது.

வரைபு 04 – தொழிற்பாட்டு வருமானம் மற்றும் தொழிற்பாட்டு மிகை




.

# 03

# சாதாரண நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி

## 3.1 ஊழியர்களின் உந்துதலை அதிகரித்தல்

2016 ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையில் நடாத்தப்படுகின்ற பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பதவியணியினரின் வினைத்திறன், உற்பத்தித்திறன், ஊழியர் திருப்தி, கூட்டு உணர்வு என்பவற்றினை விருத்தி செய்வதன் ஊடாக அவர்களிடையே உந்துதலை ஏற்படுத்துவதற்கும் அதனூடாக அவர்களது வேலை செய்யும் ஆற்றலை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றுவதற்கும் முடிந்துள்ளது. அதனால் முறையே நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றினை தொடர்ந்தும் செயற்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கில் பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு நடாத்தப்பட்டன. அதற்காக அதிகமான நிதி ஏற்பாடுகள் நிதியத்தினால் ஒதுக்கப்பட்டன.

| திகதி | பயிற்சி வழங்கிய நிறுவனம் | பயிற்சி பட்டறை | பங்கேற்ற ஊழியர்கள் |
|---|---|---|---|
| 2016.02.20 | திறன் விருத்தி நிறுவகம் | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலகை முறை | ஆவண காப்பக உதவியாளர் |
| 2016.06.22 | ஸொப்ட் கீ நிறுவகம் | கணனி பொது லெஜர் | 4 ( முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.07.02 | ஆர்.எச். பயிற்சி நிறுவகம் | கட்டட பராமரிப்பு தொடர்பானது | கட்டட மேற்பார்வையாளர் |
| 2016.08.22 | ஆர்.எச். பயிற்சி நிறுவகம் | திறன் விருத்தி வேலை மேற்பார்வை | 1 ( முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.09.06 | கட்டட பொறித் தொகுதி பயிற்சி நிலையம் | பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் | 1 ( சாரதி) |
| 2016.09.19 | திறன் விருத்தி நிறுவகம் | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைமை | ஆவண காப்பக உதவியாளர் |
| 2016.09.27 | எடெம்ஸ் திறன் விருத்தி நிறுவகம் | எக்ஸ் எல் மென்பொருள் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 111)<br>2 (முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.10.13 | திறன் விருத்தி நிறுவகம் | செயற்திறன்மிக்க உள்ளக கணக்காய்வு | உள்ளக கணக்காய்வாளர் |
| 2016.10.20 | திறன் விருத்தி நிறுவகம் | களஞ்சிய முகாமைத்துவம் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 1) |
| 2016.10.09 | திறன் விருத்தி நிறுவகம் | தொடர்பாடல் திறன் விருத்தி | கணக்கு அலுவலர் 11 |
| 2016.11.24 | திறன் விருத்தி நிறுவகம் | களஞ்சிய முகாமைத்துவம் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 1) |
| 2016.11.30 | திறன் விருத்தி நிறுவகம் | செயற்திறன்மிக்க தொடர்பாடல் மற்றும் தனிநபர் உறவு | 1 (முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.09.06 | திறன் விருத்தி நிறுவகம் | பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் | 1 ( சாரதி) |
| 2016.09.19 | திறன் விருத்தி நிறுவகம் | அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைமை | ஆவண காப்பக உதவியாளர் |
| 2016.09.27 | எடெம்ஸ் திறன் விருத்தி நிறுவகம் | எக்ஸ்எல் மென்பொருள் | 2 (முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.10.13 | திறன் விருத்தி நிறுவகம் | களஞ்சிய முகாமைத்துவம் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 1) |
| 2016.10.20 | திறன் விருத்தி நிறுவகம் | களஞ்சிய முகாமைத்துவம் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 1) |
| 2016.10.09 | திறன் விருத்தி நிறுவகம் | தொடர்பாடல் திறமை | கணக்கு அலுவலர் 11 |
| 2016.11.24 | திறன் விருத்தி நிறுவகம் | களஞ்சிய முகாமைத்துவம் | 1 (முகாமைத்துவ உதவியாளர் 1) |
| 2016.11.30 | திறன் விருத்தி நிறுவகம் | செயற்திறன்மிக்க தொடர்பாடல் மற்றும் தனிநபர் உறவு | 1 (முகாமைத்துவ உதவியாளர் 111) |
| 2016.09.06 | கட்டட பொறித் தொகுதி பயிற்சி நிலையம் | பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் | 1 ( சாரதி) |

மேலும் விடயங்களை ஆராயும் போது முன்னர் கணக்காளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தருக்கு மாத்திரம் உரித்தாக காணப்பட்ட அலுவலக கூடங்கள் ஏனைய பிரதான உத்தியோகத்தர்களான கணக்கு அலுவலர், உள்ளக கணக்காய்வு அலுவலர், கடன் அறவீட்டு அலுவலர், காசாளர், கனிஷ்ட முகாமையாளர் 11, களஞ்சிய பொறுப்பாளர் ஆகியோருக்கு நிதியத்தினால் வழங்கப்பட்டமை மூலம் மேற்படி அலுவலர்களின் பணிகளில் குறிப்பிடத்தக்க செயலாற்றுகை மாற்றம் ஒன்றினையும் மற்றும் வினைத்திறனையும் காணக் கூடியதாக உள்ளது.

**கௌரவ நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்கள் எமது நிதிய வளாகத்தை கண்காணிப்பதற்காக வருகை தந்த சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ விழா.**

நிருவாக நம்பிக்கை பொறுப்பாளரின் அழைப்பின் பேரில் நிதியத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக கௌரவ நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்கள் எமது நிதியம் அமைந்துள்ள வளாகத்திற்கு முதல் முறையாக வருகை தந்ததுடன் அதன் நிமித்தம் எமது நிறுவனமானது உத்தியோகபூர்வ வரவேற்பு விழா ஒன்றினை ஏற்பாடு செய்தது. இவ்விழாவில் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட விருந்தினர் பலர் இவ்விழாவில் பங்கேற்றனர்.

அந்நிகழ்வின் விசேட சந்தர்ப்பங்கள் அடங்கிய புகைப்படங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.



கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் சபையில் உரையாற்றியபோது



விசேட விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றிய போது



கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளருடன் அன்றைய தினம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேனீர் விருந்துபசாரத்தில் பங்கேற்றபோது.



கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளா் சபையுடன் தேனீா் விருந்துபசாரத்தின் மத்தியில் சிநேகபூர்வமாக உரையாற்றிக் கொண்டிருக்கையில்

### 3.2 பதவியுயர்வு நடைமுறைகள்.

நிதியத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தா் ஒருவரான ஐஐ கனிஷ்ட முகாமையாளா் 2016.11.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் முறையே நிலுகைக் கடன் தவணைத் தொகையினை மீள அறவிட்டுக் கொள்ளும் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காக மற்றும் செயற்படா கடன் ஆவணங்களை குறைத்துக் கொள்ளும் நோக்கில் கடன் அறவீட்டு அலுவலா் பதவிக்கு பதவி உயா்த்தப்பட்டாா். 2015 ஆம் ஆண்டிலே நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளரினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் செய்த கோரிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலே நிதியத்தில் இரண்டு பதவிகளை நிறுவுவதற்காக அனுமதியளிக்கப்பட்டது. மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் நிறுவப்பட்ட பதவிகளில் ஒன்று தகவல் தொழில்நுட்ப அலுவலா் பதவி மற்றையது கனிஷ்ட முகாமையாளா் ஐஐ ஆகும். தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம் கருதியும் நிறுவனத்தின் கடன் வழங்கல் மற்றும் கடன் அறவிடல் பொறிமுறையை இலகுபடுத்தும் முகமாகவும் மேலும் எழுத்துமூல பணிகளை குறைத்துக் கொள்ளும் நோக்கிலும் இப்பதவி உருவாக்கப்பட்டது.

செய்யப்பட்டன. கட்டட மேற்பார்வையாளர் பதவிக்கு கட்ட உதவியாளர் பதவி வகித்த உத்தியோகத்தர் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டதுடன் ஆவணக் காப்பக உதவியாளர் பதவிக்கு அலுவலக பணியாளர் III பதவி வகித்த உத்தியோகத்தர் ஒருவரை அப்பதவியல் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டார். அவ்வாறே பங்களா பொறுப்பாளர் பதவிக்கு அலுவலகப் பணியாளர் III பதவி வகித்த ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அவ்வாறே முகாமைத்துவ உதவியாளர் தரம் II பதவி வகித்த நிறுவனத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் அவரது செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டு முகாமைத்துவ உதவியாளர் தரம் I இற்கு 2016.11.01 ஆம் திகதி முதல் பதவி உயர்வு செய்யப்பட்டார்.

.

### 3.3 புதிய ஆட்சேர்ப்புக்கள்

நிதியத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடம் ஒன்றும், முகாமைத்துவ உதவியாளா் ஐஐஐ பதவிக்குரிய இரண்டு வெற்றிடங்களும் நிரப்புவதற்காக உத்தியோகபூா்வ இணையத்தளம் மற்றும் பத்திரிகை அறிவித்தல் என்பவற்றில் விளம்பரம் செய்ததன் பின்னா் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் தகைமை பெற்றவா்களுக்கு முறையான நோ்முகப் பாீட்சைகள் குழுவொன்றினால் எழுத்துப் பாீட்சை ஒன்றினை நடாத்தியதன் பின்னா் வெளிப்படையான தன்மையுடன் தோ்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டனா்.

அலுவலக பணியாளா் தரம் ஐஐஐ பதவிக்கு 2015.12.01 ஆம் திகதி முதல் அமய அலுவலக பணியாளா் ஐஐஐ ஆக பணியாற்றிய அலுவலரை2016.07.27 ஆம் திகதி முதல் அந்த வெற்றிடம் நிலவிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டாா். மேலும் வெற்றிடமாகக் காணப்பட்ட சாரதி பதவிக்கு 2016.07.01 ஆம் திகதி முதல் புதிய அலுவலா் ஒருவா் ஆட்சோ்ப்புச் செய்யப்பட்டாா்.

### 3.4 நிதிய வளாகத்தை மேம்படுத்தல்

நீண்ட காலமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்ட லோஹோர் சீமாட்டி கடன் நிதியக் கட்டிடத்தை தற்காலத்திற்கு பொருத்தமானவாறு திருத்தியமைக்கும் பணிகள் 2015 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத்திருத்தப் பணிகளுக்காக ஆகக் குறைந்த கேள்வி 23 மில்லியன் ரூபா தொகையினை சமா்ப்பித்திருந்த சிவில் பாதுகாப்பு திணைக்களம் அனமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரராக நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தேர்ந்தெடுக்கப்பட்டனரதேர்ந்தெடுக்கப்பட்டனர். மேற்படி மேற்படி திருத்தப் பணிகளுக்கான நியமக் குறிப்பீடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் கொடுப்பனவுகள் என்பன மேற்கொள்ளும் போது முறையான செயற்திட்டம் ஒன்றின் ஊடாக கொடுப்பனவு பட்டியல்களில் மதிப்பீட்டு பெறுமதியினை அளவிடல் மற்றும் மேற்பார்வை செய்தல் உள்ளிட்ட ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்தை (ளுனு ரு ஊஊ) நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

**அட்டவணை 09 – லோஹோர் சீமாட்டி கடன் நிதியக் கட்டிட திருத்தப் பணிகள்**

| | | |
|---|---|---|
| மொத்த மதிப்பீட்டுத் தொகை | | **23,462,043.69** |
| 2015 இல் வழங்கிய 20% முற்பணத் தொகை | | ( 4,692,408.73 ) |
| 2016 ஆரம்பத்தில் மீதித் தொகை | | **18,769,634.96** |
| 2016.06.27 திகதியன்று நியமக் குறிப்பீட்டுப் பத்திரத்தின் பெறுமதி | 542,683.45 | |
| 2016.07.22 திகதியன்று நியமக் குறிப்பீட்டுப் பத்திரத்தின் பெறுமதி | 2,152,120.47 | |
| 2016.12.20 திகதி இடம்பெற்ற விழாவிற்காக எமது நிறுவனத்தினால் அவர்களுக்கு வழங்கிய மூலப் பொருட்களின் பெறுமதி | 91,165.00 | ( 2,785,968.92 ) |
| 2016 இறுதியில் மீதித் தொகை | | **15,983,666.04** |

அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலே பூர்த்தி செய்யப்பட்ட மொத்த பணியின் அளவு 32மூ ஆகும்.

### 3.5 அலுவலகப் பணிகளை நவீனமயப்படுத்தல்

நிதியத்தின் பதவியணியின் ஊழியர்களுக்கு தமது விடயங்கள் மற்றும் பணிகளுடன் தொடர்புடையவாறு நிதியத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பதவியணியினர் தமது விடயத்துடன் தொடர்புடைய திறமைகளை விருத்தி செய்து கொள்வதன் மூலம் அனைத்து உத்தியோகத்தர்களும் தமக்குரிய பணிகளுக்கு மேலதிகமாக மற்றைய அலுவலர்களின் கடமைகள் பற்றிய அறிவினையும் பெற்றிருத்தல் கட்டாயம் என்பதனால் அவரவரது பணிகள் பற்றிய பயிற்சியொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதனால் நிறுவன பணிகளை தொடர்ச்சியாகவும் மற்றும் தடையின்றியும் வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்கான ஆற்றல் விருத்தி அடைந்துள்ளது.

**நிதியத்தின் காப்புக் கோப்புக்களை (டீயஉம்ரி குடைநள) பாதுகாப்பான முறையில் பேணி வருதல்.**

எமது கடன் நிதியத்தின் கடன் கணக்கு முறைமை முழுமையாக கணனி மயப்படுத்தியுள்ளதுடன் நாளாந்தம் அந்த கணனி மென்பொருள் முறைமையிலிருந்து காப்புக் கோப்புகள் பெறப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக மாதாந்தம் ஒரு முறை காப்புக் கோப்புக்களைப் பெற்றுக் கொண்டு அக்கோப்பானது நிதியமைச்சில் பாதுகாப்பான ஒரு இடத்தில் தேக்கி வைப்பது பொருத்தமானதென கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016.10.31 ஆம் திகதி மேற்படி காப்புக் கோப்பு ஒன்றினை னுஏனு இருவட்டு ஒன்றுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (நிருவாக மற்றும் மனிதவள அபிவிருத்தி) அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் மேற்படி காப்புக் கோப்புக்கள் அடங்கிய னுஏனு இருவட்டு நிதி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கணினி வலையமைப்பு தொழிற்பாட்டு மையத்திற்கு (மேழஊ) அனுப்பி வைக்கப்பட்டது.

### 3.6 பதவியணிக்கான கடன்

கடன் பெறுநரின் மற்றும் பிணையாளர்கள் இருவரினதும் 05 வருட சேவைக்காலம் மற்றும் 40% சம்பள எல்லை என்பவற்றினை கவனத்திற் கொண்டு கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டிலே 8% வட்டி வீதத்தின் மீது பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா. 100,000/- கடன் திட்டத்தில் மாற்றமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதில் ஒரு முறைமையின் கீழ் மாத்திரம் ஒருவருக்கு ஒரு கடன் தொகைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

### 3.7 லேக்ஹவுஸ் புத்தக நிலையத்தை அகற்றுதல் மற்றும் வைப்புத் தொகையினை விடுவித்தல்

லேக்ஹவுஸ் புத்தக நிலையத்திற்கும் நிதியத்திற்கும் இடையே நீண்ட கால வாடகை அடிப்படையின் மீது காணப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் வாடகைத் தவணை உரிய காலப் பகுதியில் கிடைக்கப் பெறாமையினால் ஏற்பட்ட நிதித் தட்டுப்பாடு காரணமாக 2016.02.29 ஆம் திகதியன்று இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது.

ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக இல்லாதவாறு குத்தகைக் கூலி நிதியத்திற்கு நிலுவை தொகை செலுத்துதல் காரணமாக அஅந்த அனைத்து கடன் தவணைகளும் லேக் ஹவுஸ் புத்தக நிலையத்தினால் எமது நிதியத்தில் தேக்கி வைத்துள்ள வைப்புத் தொகையில் இருந்து அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு அமையாத குத்தகைக் கூலிகள் நிதியத்திற்கு நிலுவையாக உள்ளமை தொடர்பான விபரம் பின்வருமாறு.

அட்டவணை 10 – வைப்பு பணத்தை ஈடு செய்தல்

| விபரம் | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| வைப்புத் தொகை 2016.01.01 | | | **2,531,750.00** |
| நிலுவை குத்தகை கூலி | | | |
| 2015 | செப்டெம்பர் | 240,031.00 | |
| | ஒக்டோபர் | 422,875.00 | |
| | நவம்பர் | 422,875.00 | |
| | டிசம்பர் | 422,875.00 | |
| | பெப்ரவரி | 422,875.00 | |
| 2016 | ஜனவரி | 422,875.00 | |
| | பெப்ரவரி | 422,875.00 | |
